**முதன்மை மாவட்ட நீதிமன்றம், சிவகங்கை.**

**OS.No - 28/2024**

Date: 28.10.2025 PW. 1 (முனியசாமி த/பெ.கிருஷ்ணன்)

**பிரதிவாதி தரப்பு குறுக்குவிசாரணை:**

என்னால் தாக்கல் செய்யப்பட்ட புரோநோட்டில் உள்ள கையெழுத்து மற்றும் சாட்சி கையொப்பம் ஒரு பேனாவாலும், அதிலுள்ள வாசகங்களும் அழுத்தமான மை உள்ள வேறு ஒரு பேனாவாலும் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். முதலில் வாசகங்கள் எழுதப்பட்டு பிரதிவாதி அதை படித்துப்பார்த்துவிட்டு அவர் பேனாவை எடுத்து அதில் அவர் கையொப்பம் போட்டார். மேற்படி புரோநோட்டில் உள்ள சாட்சி கையொப்பம் வேறு ஒரு பேனாவினால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் ஒரு சாட்சி புரோநோட்டில் உள்ள வாசகங்களை எழுதி அவரே சாட்சி கையொப்பமும் போட்டார். வேறு ஒரு சாட்சி தனியாக அவர் போனாவினால் சாட்சி கையொப்பம் போட்டார். புரோநோட்டில் உள்ள அனைத்து எழுத்துக்கள் மற்றும் கையொப்பமும் கருப்பு மையினால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிரதிவாதிக்கு புரோநோட்டில் எழுதப்பட்டுள்ள சங்கதிகள் எதுவும் தெரியாது என்றும் பிரதிவாதிக்கு தெரியாமலேயே அந்த வாசகங்களை நானே பூர்த்தி செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 2013ம் வருடத்தில் நான் பிரதிவாதியிடம் சென்று நான் தொழில் செய்ய விரும்புகிறேன் என்றும் அதற்காக எதாவது செய்ய முடியுமா என்று கேட்டேன் என்றால் அவ்வாறு எதுவும் நான் கேட்கவில்லை. 2013ம் வருடத்தில் பிரதிவாதி SBI service centre நடத்தி வந்தார் என்பது பற்றி தெரியுமா என்றால் தெரியும். பிரதிவாதி SBI service centre Branch ஐ தேமூர்வழி, கருங்குத்தி, கொல்லங்குடி ஆகிய ஊர்களில் நடத்தி வந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பின்பு சாட்சி பிரதிவாதி SBI service centre நடத்தி வந்தது 2019ம் வருடத்திற்கு பிறகு தான் தனக்கு தெரியும் என்று சொல்கிறார். 2019ம் காலகட்டத்தில் பிரதிவாதி SBI service centre நடத்துவதற்கு முதலீடு செய்வதற்காக ரூ.3,00,000/- நான் பணம் கடனாக கொடுத்து உதவி செய்தேன் என்றால் 2019ம் வருடத்திற்கு பிறகு கொடுக்கவில்லை. ஆனால் 2008ம் வருடம் ரூ.3,00,000/- ஒரு நிலத்தை பிரதிவாதி வாங்குவதற்காக கடனாக கொடுத்தேன். பிரதிவாதியால் ஒரு நிலம் வாங்க முதலீடு செய்ய முடியாததால் நானும் அதில் பங்குதாரராக சேர்ந்து

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2025.10.28 17:40:58 +0530

தனியாக முதலீடு செய்து அதுவல்லாமல் பிரதிவாதிக்காக ரூ.3,00,000/- கடனாக கொடுத்தேன். மேற்படி விவரங்களை என் பிராதில் சொல்லவில்லை என்றால் சரிதான். அதற்கு பதிலாக எனக்கு அந்த நிலத்தை எழுதிக்கொடுத்ததால் அந்த பரிமாற்றம் முடிந்துவிட்டது என்பதால் சொல்லவில்லை. 04.06.2010ல் வங்கி காசோலை மூலம் பிரதிவாதிக்கு ரூ.10,00,000/- கொடுத்தேன் என்றால் சரிதான். அதற்கு ஆதரவாக ஒரு ஈடுகடன் பத்திரம் எழுதி வாங்கிகொண்டேன் என்றால் சரியல்ல. அந்த சமயத்தில் நண்பர் என்பதற்காக காசோலை மூலம் அந்த பணத்தை கொடுத்தேன். ஆனால் 2021ம் வருடம் தான் அந்த பணத்திற்காக பதிவு செய்யப்படாத ஈடுகடன் பத்திரம் எழுதி வாங்கினேன். இங்கு காட்டப்படும் 31.05.2010 ம் தேதியிட்ட ஈடுகடன் பத்திரம் எனக்காக எழுதிக்கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. என்னுடைய கையொப்பமும் அதில் இல்லை. 2010ம் வருடம் ஜீன் மாதம் வங்கிக்காசோலை மூலம் கொடுக்கப்பட்ட ரூ.10,00,000/- பணத்திற்காகத்தான் தாவா புரோநோட் எழுதிக்கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த சமயத்தில் வாங்கப்பட்ட கையொப்பம் இடாத புரோநோட்டை நானே நிரப்பி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 2013ம் வருடத்திற்கு பிறகு நானும் பிரதிவாதியும் பேசிக்கொள்வதில்லை என்றால் சரியல்ல. 2013ம் வருடம் நான், அர்ச்சுனன் மற்றும் பிரதிவாதி ஆகியோர் கூட்டாக சேர்ந்து வாங்கிய இடத்தை வங்கி கணக்கு மூலம் பிரதிவாதி பெற்ற தொகைக்கு நானே மொத்தமாக மேற்படி நிலத்தை எழுதி வாங்கிக்கொண்டேன் என்றால் சரியல்ல. ஏற்கனவே ரூ.3,00,000/- கொடுத்ததற்காகத்தான் அந்த இடத்தை எழுதி வாங்கினேன். அதன்பிறகு காளையார்கோவில், மாதாநகரில் உள்ள பிளாட்டையும் நான் வங்கி கணக்கின் மூலம் கொடுத்த தொகை 10,00,000/-க்கு எழுதி வாங்கிக்கொண்டேன் என்றால் சரியல்ல. அதற்காக தனியாக பணம் செலுத்திவிட்டேன். 2013ல் நான் வங்கிய இடத்தை பற்றியோ, காளையார்கோவில், மாதாநகரில் உள்ள இடத்தை பற்றியோ நான் தாக்கல் செய்துள்ள பிராதில் சொல்லவில்லை என்றால் அது தனியான பரிமாற்றம் முடிந்துவிட்டது என்பதால் சொல்லவில்லை. நான் வங்கி கணக்கின் மூலம் பிரதிவாதிக்கு ரூ.10,00,000/- கொடுத்துவிட்டு அதை விட அதிகமான இடத்தை பிரதிவாதியிடமிருந்து கிரயம் பெற்றுக்கொண்டு மேற்படி வங்கி கணக்கிலிருந்து கொடுக்கப்பட்ட ரூ.10,00,000/-

பிரதிவாதியால் கொடுக்கப்பட்ட பூர்த்தி செய்யப்படாத புரோநோட்டை வைத்து தற்போது அதை பூர்த்தி செய்து இந்த வழக்கை தாக்கல செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிராதில் சொல்லியுள்ளது போல் தொகையை பெற எனக்கு அருகதை இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:** இல்லை.

சாட்சி சொல்லியபடி என்னால் தட்டச்சுருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, திறந்த நீதிமன்றத்தில் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, கையொப்பமிடப்பட்டுள்ளது.

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2025.10.28 17:41:05 +0530

**முதன்மை மாவட்ட நீதிபதி,**
**சிவகங்கை.**